பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

**05 02 2025 Wednesday** **6 30 Pm**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- நீர் ஆதாரங்களை வலுப்படுத்துவதற்காக நடத்தப்படும் யாத்திரை மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
- தமிழகத்தில் நெல் கொள்முதல் 10 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டியுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- ஐஸ்லாந்து சர்வதேச பாரா நீச்சல் போட்டியில் இந்தியாவின் **Mohammad Shams Aalam Shaikh** தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குப்பதிவு பொதுவாக அமைதியாக நடந்து முடிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
(வாய்ஸ் பைட் - மூர்த்தி 33 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

நீர் ஆதாரங்களை வலுப்படுத்துவதற்காக நடத்தப்படும் யாத்திரை மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

இந்த யாத்திரையை காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மழைநீர் சேமிப்பை வலியுறுத்தும் வகையில் இந்த யாத்திரை நடத்தப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் நெல் கொள்முதல், 10 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டியுள்ளதாக உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் சன்னரக நெல் குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 450 ரூபாய் என்ற விலையிலும், பொதுரக நெல் குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 405 ரூபாய் என்ற விலையிலும் கொள்முதல் செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 10 லட்சத்து 41 ஆயிரத்து 583 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்காக, 2 ஆயிரத்து 244 கோடி ரூபாய் விவசாயிகள் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

கள்ளச்சாராயத்தை ஒழிக்க மாநிலம் முழுவதும் கடுமையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே டாஸ்மாக் கடை அருகில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதாக வெளியான செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

மரக்காணம் மற்றும் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்ட பின்னரும் கூட, இதுபோன்ற செயல்கள் தொடர்வது ஏற்புடையதல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கள்ளச்சாராய சம்பவத்தில் தொடர்புடைய அனைவர்மீதும் அரசியல் குறுக்கீடு இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த்-தும் இந்த கள்ளச்சாராய சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டாஸ்மாக் கடைகளை ஆய்வு செய்யவும், கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கும் தனிப்பிரிவை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

>>>>>>><<<<<<

பழைய ஓய்வூதிய திட்டத்தை தமிழக அரசு நேரடியாக செயல்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு ஊழியர்களுக்கு எத்தகைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்தலாம் என்பது குறித்து பரிந்துரைப்பதற்காக குழு ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியிருப்பது, ஏமாற்று வேலை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, குழு அமைக்கும் திட்டத்தை கைவிட்டு, தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பழைய ஓய்வூதிய திட்டத்தை திமுக அரசு செயல்படுத்த வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பகுதியில் 13 வயதான அரசு பள்ளி மாணவி, ஆசிரியர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த குற்றத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் திமுக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்டந்தோறும் குழந்தைகள் நல வாரியத்திற்கான உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்றும், பள்ளிகளில் பெண் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே அரசு நடுநிலைப் பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த 3 பேர் போக்ஸோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<

வேலூர் மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு கோழி இறைச்சி வழங்குவதற்காக தற்போது கோழிப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

நன்னடத்தை சிறைவாசிகள் மூலம் கோழிகள் வளர்க்கப்படுவதாக வேலூர் மத்திய சிறைத்துறை டிஐஜி திரு. சண்முகசுந்தரம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – டிஐஜி 34 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேசுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பாகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

பெரம்பலூர் மாவட்டம், எறையூர் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் 10, 11, மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான வினாடி-வினா வழிகாட்டு தொகுப்பினை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று வழங்கினார்.

>>>>>>><<<<<<

விழுப்புரம் மாவட்டத்தின் புதிய ஆட்சியராக திரு. ஷேக் அப்துல்ரஹ்மான் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் மற்றும் ராசிபுரம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. உமா இன்று ஆய்வு செய்தார்.

>>>>>>><<<<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பிலான தொழில்நெறி வழிகாட்டு கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, ஆட்சியர் டாக்டர் சந்திரகலா தலைமையில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<

நெல்லையில் மருத்துவக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு. கார்த்திகேயன் எச்சரித்துள்ளார்.

>>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரையாண்டு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுடன் ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று கலந்துரையாடினார்.

>>>>>>><<<<<<

நாகை மாவட்டத்தில் போதை பயன்பாடு இல்லா தமிழகம் என்ற விழிப்புணர்வு கைபேசி செயலியை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பதவிறக்கம் செய்து கொள்ளுமாறு ஆட்சியர் திரு. ஆகாஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் கடல் ஆமைகள் உயிரிழப்பை தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு பேரணி மற்றும் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார், ஆறு பேர் காயமடைந்தனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் சென்னை புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வரும் சனிக்கிழமை தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐஸ்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பாரா நீச்சல் போட்டியில் இந்தியாவின் **Mohammad Shams Aalam Shaikh** தங்கப்பதக்கம் வென்றார்.

200 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில், மூன்று வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களையும் அவர் வென்றுள்ளார்.

>>>>>>><<<<<<

டிவென்டி — டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா 38 இடங்கள் முன்னேறி, 2வது இடத்தை பிடித்துள்ளார். மூன்றாவது இடத்தில் திலக் வர்மாவும், ஐந்தாவது இடத்தில் சூர்யகுமார் யாதவ்-ம் உள்ளனர்.

பந்துவீச்சுப் பிரிவில் வருண் சக்ரவர்த்தி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>>END<<<<<<**